DMC

# சாகும்வரை உண்ணாவிரதம் குறித்து அரசு மௌனம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மூன்றாவது நாளாக உண்ணாவிரதம் அனுஷ்டித்து வரும் போர்க்கைதிகளின் நிலை தொடர்பாக அரசு மௌனம் சாதித்து வருகிறது.

உண்ணாவிரதிகளான 15 பொலிசாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் நேற்று களைப்படைந்த நிலையில் காணப்பட்டனர். முழங்கால் இடுப்பு மூட்டு, கண்ணிமைகளில் நோ எடுத்துள்ளதாக இவர்கள் நேற்று தெரிவித்தனர்.

பலர் தமக்கு வயிற்றுழைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரி

(4ம் பக்கம் பார்க்க)

-4-3-1995

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 20 இதழ் 22
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-3-1995

## "முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்"

– போர்க்கைதிகள்

(யாழ்ப்பாணம்)

நாம் ஆரம்பித்துள்ள போராட்டத்திற்கு அரசின் முடிவு கிடைக்கும்வரை எமது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று உண்ணாவிரதிகள் களைத்த நிலையிலும் உறுதியுடன் தெரிவித்தனர்.

எமதுவிடுதலை தொடர்பாக பல தடவைகள் அரசுக்கு கோரிக்கை விடுத்த நாம் தற்போது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதாகவும் அறிவித்தோம். ஆனால் அரசு ஏனோ தானோ என்று இருக்கின்றது

( 4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. ஆட்சிக்காலத்தின் பயங்கரம்

# ரணில் வீட்டிற்கு அருகில் பிரபல சித்திரவதைகூடம் கண்டுபிடிப்பு

## முக்கிய அரசியல்வாதிகள் பொலிஸ் விசாரணையில்

[கொழும்பு]

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டிற்கு அண்மையில் பிரபலசித்திரவதை கூடமொன்று இயங்கி வந்ததுகண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக முக்கிய அரசியல்வாதிகள் பலர் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசு பதவி வகித்த காலத்தில்இந்த சித்திரவதை கூடம் இயங்கி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த சித்திரவதைக்கூடம் பியகம பகுதியில் அமைந்திருந்தது. இந்த சித்திரவதைக்

(4ம் பக்கம் பார்க்க)

## "அமைதி முயற்சிதோற்றால் ஆரோக்கியமாக இராது"

(கொழும்பு)

பூநகரி முகாமை அகற்றுவதுதான் தற்போதைய பெரிய பிரச்சினையாக மாறி சமாதான முயற்சிகள் தோல்வியடையுமானால் தற்போதைய நிலைமையில் அரசாங்கத்திற்கு ஆரோக்கியமானதாக இராது. இவ்வாறு கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: விடுதலைப்புலிகளுடன் இணக்கம் காணப்படாது தீர்வு எதனையும் நடைமுறைப்படுத்துவது இயலாத காரியமாகவே இருக்கும். விடுதலைப்புலிகளை அரசியல் ரீதியாகவே அரசாங்கம் அணுகவேண்டும்.

அந்த வகையில் பூநகரி இராணுவ முகாமை அகற்றுவது அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியாக ஒரு பின்னடைவாக இருக்காது. அரசியல் தீர்வுக்காக இராணுவத்தை பின்வாங்க வேண்டுவது அவசியமாகும்போது அதனை அரசாங்கம் செய்யவேண்டும்.

சமாதான முயற்சிகள் வெற்றியடைந்தால் பல இராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டிவரும் அதில் சிலவற்றை குறிப்பாக பூநகரி முகாமை தற்போது மூடிவிட்டு அரசாங்கம் தனது நேர்மையையும் நம்பிக்கையையும் நிலைநாட்டினால் என்ன? என்றும் அப்பத்திரிகை கேள்விஎழுப்பியுள்ளது. -றி

## "சமாதான முயற்சிகளுக்கு புலிகள் ஆக்கபூர்வமானபதில்"

– ஜனாதிபதி பெருமிதம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணவென அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியடைய வேண்டுமானால் சகல சமூகத்தினரின் ஆதரவும் அவசியம் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது,

இது சம்பந்தமாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியளித்துள்ளன. முக்கியமாக பகைமை தவிர்ப்பு நடவடிக்கை வெற்றி

(4ம் பக்கம் பார்க்க)

## இலக்கிய கருத்தரங்கும் சிறப்புடன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் 'வெளிச்சம்' சஞ்சிகையும் இணைந்து நடாத்தி வரும் இலக்கியக் கருத்தரங்கு நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் வெகு விமரிசையாக காத்திரமான கருத்துக்கள் பரிமாறிக் கொண்ட அரங்காக

(4ம் பக்கம் பார்க்க)

## அரசின் விசாரணைக்குழுவினால் எதுவித பயன்பாடும் இல்லை

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா அரசினால் அமைக்கப்பட்ட காணாமல் போனவர் பற்றிய விசாரணைக்குழுவினால் தமக்கு எதுவிதபயனும் இல்லையென தென்தமிழீழ மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டதாக எதுவித தகவல்களும் தமக்கு வழங்கப்படவில்லையென்றும் தங்கள் பகுதிகளுக்கான தொடர்பு வசதிகள் படை நடவடிக்கைகளால் அற்றுப்போய்விட்டதெனவும் அம்மக்கள் தெரிவித்தனர்.

சிங்களப்படையினர் பெரும் படுகொலைகளைப் புரிந்த தங்கவேலாயுதபுரம், நற்பிட்டிமுனை, மைலந்தனை, வீரமுனை' மல்வத்தை, பொத்துவில், கந்தளாய் ஆகிய பகுதிகளிலிருந்து எதுவித புகார்களும் விசாரணைக்குழுவுக்கு அனுப்ப ஒழுங்குகள் செய்யப்படவில்லை.

(4ம் பக்கம் பார்க்க]

## காணாமல்போனோர் இறப்பை பதிவு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

வன்செயல் நடவடிக்கைகளின்போது காணாமல் போயுள்ள நபர்களின் இறப்புக்களை பதிவுசெய்வதற்கான 1995ம் ஆண்டின் இரண்டாம் இலக்க இறப்பு பதிவுச் சட்டத்தை உடனடியாக அமுல்படுத்துமாறு பதிவாளர் நாயகம் அனைத்து மாவட்ட பதிவாளர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தச் சட்டம் ஜனவரி 5ம் திகதியிலிருந்து தொடரும் இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும். எனவே துரிதமாகவே செயற்பட்டு இறப்புக்களை பதிவு செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒரு வருடகாலமாக ஒருவர் காணாமல் போயிருந்தால் அரசியற சட்டத்தின் 108ம் பிரிவின் கீழ் சாட்சிகளின் அடிப்படையில் ஒருவரின் இறப்பு பற்றி நீதிமன்றமே தீர்ப்பளிக்க முடியும்.

(4ம் பக்கம் பார்க்க)

## கிளாலிபூநகரிபடகு சேவை நேரம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுசேவை வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பிற்பகல் 3-00 மணி முதல் இரவு 8-00 மணிவரை இருபக்க படகு சேவை நடைபெறும். ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6-00மணிமுதல் காலை 7-00 மணிவரை பூநகரி ஆலங்கேணியிலிருந்து கிளாலிக்கு ஒருபக்கப் படகுசேவை மட்டும் நடைபெறும்.

எதிர்வரும் 06ம் திகதியில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு மாசிமாதத்திற்கான ஒய்வூதியப் பணம் எதிர்வரும் 6ம் திகதி திங்கட்கிழமையன்று வழங்கப்படவுள்ளது. (72)

## வரட்சியினால் வெப்பநோய்

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியினால் கண்நோய், கூவைக்கட்டு, சின்னமுத்து பொக்குளிப்பான் ஆகியவெப்பநோய் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. வெப்பநோயினால் குழந்தைகளே கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர். 95

## கட்டுரைப் போட்டி

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை பகுதியில் இயங்கும் சன சமூக நிலையங்களுக்கிடையில் கவிதைப் போட்டி. கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகிய பல்வேறு போட்டிகளை நடாத்துவதற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் சன சமூக நிலயங்களின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களை வலிமேற்கு பிரதேச சபையின் சுழிபுரத்திலுள்ள தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்தும் உடற்பயிற்சிப் போட்டி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று 4ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

0 0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 4ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில்வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் வித்தியாலய அதிபர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க 4வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 4ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு இல. 16 கொழும்புத்துறை வீதியில் உள்ள சங்கப் பணிமனையில் இடம்பெறும். -154

0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மணலியப்பதி ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலயத்தின் வருடாந்தக் குளிர்த்தித் திருவிழா இன்று 4ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும். 154

0 0 0 0

(யாழ்ப்பாணம்)

வடமாநில ஒய்வூதியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 4-ம்திகதி சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நல்லூர் சாதனா த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

# பல லட்சம் ரூபாவிற்கு அரசு வாகன இறக்குமதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலையுயர்ந்த வாகனங்களில் பவனிவந்தவர்கள் என்று குற்றம் சாட்டிய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம், தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாவிப்பதற்கு 1400 லட்ச ரூபா பெறுமதியான 82 வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளது என்று 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதில் 85 வீதமான தொகையை அரசாங்கமும் மிகுதிதொகையை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அறவிடும் திட்டத்தை திறைசேரி அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் செலுத்தும் தொகைகள் மாத தவணையில் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக 'யுக்திய' பத்திரிகை மேலும்தெரிவித்துள்ளது. ம-சி

பாடசாலைகளில்

# 10,000 அதிபர்கள் மேலதிகமாக உள்ளனர்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலைகளில் பத்தாயிரம் அதிபர்கள் மேலதிகமாக இருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 10,000. ஆனால் கடந்த கால ஐ. தே. ஆட்சி வழங்கிய திட்டமில்லாத பதவி உயர்வுகளினால் தற்போதுள்ள அதிபர்களின் எண்ணிக்கை 22,000, நாட்டுக்குத் தேவையான அதிபர்களின் தொகை 12.000. எனவே இலங்கையில் 10.000 பாடசாலைகளை நடாத்த 10.000 மேலதிக அதிபர்கள் உள்ளனர். ஆனாலும் இப்போதிலும் பதிலதிபாகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கு உள்ளபற்றுக்குறை 5000 க்கு மேல். ஆனால் சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் 75 பேர் மேலதிகமாக உள்ளனர். -சி

# நூலக சேவையிலும் ஆட்குறைப்பு நடவடிக்கை

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி சபைகளில் நூலகர்களின் சேவைகள் சபையின் தரங்களுக்கு அமைவாக சகல நூலகங்களையும் வகைப்படுத்தி அதன்படி ஒவ்வொரு நூலகங்களுக்கும் குறிப்பிட்ட ஆளணிக் கோப்பினை தீர்மானிக்கவேண்டும்'' பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது, அச்சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

உள்ளூராட்சி சபைகளின் சகல நூலகங்களுக்டிம் குறைந்த பட்சம் தரம் மூனறு நூலகர் பதவி ஒன்றும், ஓர் தொழிலாளி பதவியும் அமைக்கப்படவேண்டும். நூலகத்தினை பொறுப்பேற்று கடமையாற்றுவதற்கு நூலக உதவியாளர் பதவி அமைத்தலாகாது. தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நூலக பொறுப்பாளர், நூலக உதவியாளர், நூலக மேற்பார்வையாளர், நூலக தூதுவர், நூலக ஏவலாளி, நூலக பாதுகாவலர் பதவிகள் இல்லாது ஒழிக்கப்பட்டு இதற்காக நூலக சேவகர், நூலக தொழிலாளி பதவிகளைச் சிபார்சு செய்யவேண்டும். மேற்படி நாமத்தின் கீழ் நிரத்தர பதவிகள் வகிப்பவர்கள் இருப்பின் அவருடன் முடிவடையும் விதத்தில் பதவிகளை சிபார்சு செய்யப்படுவதுடன் அப்பதவிகள் அவர்கள் இளைப்பாறியபின் இல்லாதொழிக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். -52-சி

சைக்கிள்

## இலக்கத் தகடு விநியோகம்

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு பிரதேச சபையின்சுழிபுரத்திலுள்ள தலைமை அலுவலகம் 1995ம் வருடத்திற்கான துவிச்சக்கர வண்டிக்கான இலக்க தகடுகளை கடந்த வாரம் தொடக்கம் விநியோகித்து வருகின்றது. சபையின் வட்டுக்கோட்டை கிராம உப அலுவலகம், அராலி கிராம உப அலுவலகம், சுழிபுரம் கிராம உப அலுவலகம், சங்கானை பட்டின உப அலுவலகம் ஆகியவற்றில் இந்த லைசன்கிள் அனுமதிக்கான இலக்க தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (71)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் மயிலணி சைவமகா விததியாலயம் சமூகக் கல்வி மன்றமும் விவசாயக் கழகமும் இணைந்து வழங்கும் வரலாறு நூல் வெளியீடும் விவசாயப் பரிசளிப்பும் நாளை 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சைவ மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் இந்நூலின் வெளியீட்டுரையை யாழ். கல்வித் திணைக்கள பிரதிக கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதமும், வாழ்த்துரையை முன்னாள் மாவட்ட நீதிபதி பூ சதாசிவரத்தினமும், ஆய்வுரையை யாழ் பல்கலைக் கழக புவியியற்றுறைத் தலைவர் திரு. இரா. சிவசந்திரனும் நிகழ்த்துவார்கள். (162)

வல்லிபுரம்

## கோவிலுக்கு பஸ் சேவை

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை 759 இலக்கம் சிற்றூர்தி சேவைச் சங்கம் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் ஊடாக தினசரி ஒரு பஸ் சேவையை நடாத்திவருகிறது.

இவ்வல்லிபுர ஆலய பஸ் சேவை தினசரி காலை 7-30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்தும் - கொடிகாமத்தில் இருந்தும் நடாத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

சுவாமி விவேகானந்தர் நினைவு

# பேச்சுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் நடத்திய சுவாமி விவேகானந்தர் பேச்சுப்போட்டியின் இறுதி நிலையாகிய யாழ். மாவட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இராமகிருஷ்ணாலயப் பணிப்பாளர் திரு. இ. ராஜா மகேந்திரசிங்கம் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திருமதி சி இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

போட்டி முடிவுகள் வருமாறு:

கீழ்ப் பிரிவு

ஆண் 1 ர. கஜானன் (யாழ். இந்து), 2. சி சிவதர்ஷன் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்) 3. பா. பிரணவன் (மகாஜனக் கல்லூரி)

பெண்: 1. இ. நிருசா (மகாஜனக் கல்லூரி) 2. அ. அன்ரனீனு (திருக்குடும்ப கன்னியர் மடம்), 3. பா. டயானு (யாழ்ப்பாணக் கல்லூரி)

மத்திய பிரிவு ஆண்: 1. செ. சுதர்சன் (உடுப்பிட்டி அ. மி) 2. ஸ்ரீ. ஸ்ரீவிஜிந்திரன் (யாழ். இந்து) 3. க. கங்காதரன் (எழுதுமட்டுவாள் அ. த. க.)

பெண்: 1. பா. மரியம்சர்மினி (கரம்பன் சிறிய புஷ்ப ம. வி) 2. க. சிவகங்கை (புத்தூர் சோமஸ்கந்தா) 3. ந. சங்கீதா (வேம்படி மகளிர்)

மேல் பிரிவு ஆண்: 1. சி. மதனஈஸ்வரன் (நீர்வேலி அத்தியார் இந்து) 2. க கடம்பேஸ்வரன் (மானிப்பாய் மெமோறியல்) 3. சு. சுகிர்தன் (அருணோதயாக் கல்லூரி)

பெண்; 1. து. அனுசா (மகாஜனக் கல்லூரி) 2. உ. லதாங்கி (சுழிபுரம் விக்ரோறியா) 3. இ பத்மினி (வேலணை சேர். வை. து. ம. ம. வி)

## சங்கங்கள் மூலம் விநியோகம்

(அரியாலை)

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தால் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட விவசாயிகளுக்குரிய பசளைவகை தெளிகருவிகள் நீரிறைக்கும் இயந்திரங்கள் விவசாய உற்பத்தி உபகரணங்கள் ஆகியன யாழ். மாவட்டத்திலுள்ள 24 கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. -59

## நியாய விலையில் உணவுப்பொருட்கள்

(அரியாலை)

யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள வேலணை பல நோக்க கூட்டுறவுச் சங்கத்தின் மககள் கடையில் நியாய விலையில் உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. யாழ். விற்பனைத்தினைக்களத்திலும் உணவுப்பொருட்கள் நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. -59

## காப்பு திருடியவர் கைது

(நெல்லியடி)

தையல் மெசினை திருத்தச் சென்று அதன்லாச்சியிலிருந்த ஒரு சோடி பவுண் காப்பை திருடிய ஒருவரை அயலவர்கள் மடக்கிப்பிடித்து காப்பை மீட்டதுடன், அவரை காவல் துறையில் ஒப்படைத்தனர்.

இச் சம்பவம் கடந்தஞாயிற்றுக்கிழமை மாலை துன்னாலை அல்லையம்பதியில் கந்தசாமி கருணநிதி வீட்டில் நிகழ்ந்துள்ளது. 160

## இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண ஜெயந்தி தின விழாவம் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோசொற்பொழிவு நூற்றாண்டு விழாவும் இம்மாதம் 06ம் திகதி திங்கள் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில்நடைபெறும் முதன்மை விருந்தினராக ''சுவாமி'' சித்ரூபானந்தாவும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனும் கலந்து கொள்வார்கள்.

## இன்று பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்தி வந்த உதைபந்தாட்டப்போட்டியின் பரிசளிப்பு இன்று சனிக்கிழமை பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரிசளிப்பு விழாவை முன்னிட்டு 'ஏ' பிரிவில் சாம்பியனகத்தெரிவு செய்யப்பட்ட அரியாலை ஐக்கிய கழகத்துக்கும் - பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்குமிடையில்ஒரு கண்காட்சிஉதைபந்தாட்ட போட்டி நடைபெறவுள்ளது. இப் பரிசளிப்பு விழாவுக்குயாழ்ப்பாண விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ரூபசிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். .வி

## புதிய நிர்வாகிகள்

(அரியாலை)

யாழ். தனிநாயகஅடிகளார் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பின் வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வே. சுந்தரலிங்கம் உபதலைவர்: க. கனகரட்ணம் செயலாளர்; திருமதி விஜய குமாரன்பொருலாளர்: வை. மகேந்திரராஜா செயற்குழு உறுப்பினராக: மு. யோகராசா இ. ஜெயசிங்கம் சு. குமாரசாமி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். 59

0 0 0

(நெல்லியடி)

புலோலி தெற்கு முதலி அம்பாள் ஆலய தருமபரிபாலன சபையின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: சி. மார்க்கண்டு. உபதலைவர்: வி. சி. நவரத்தினம், செயலாளர்: கே. இ. கிருபாகரசூரியன், உபசெயலாளர்: மு. தங்கவேல், பொருளாளர்: செ. ஜெயவீரசிங்கம், நிர்வாக உறுப்பினர் வே. விவேகாளந்தன். -160

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தராக பின்வருவோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அ. ஆறுமுகம், உபதலைவர்: க.சரவணமுத்து, செயலாளர் டாக்டர் பி. நாகலிங்கம், பொருளார் பி. எஸ், ஞானசீலன்'

மேலும் 15 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### மணிவாக்கு

அக்கறையில்லாமல் சொல்லும் சொல் வாக்குவாதத்தை வளர்க்கும். கொடூரமாய் சொன்னசொல் வாழ்க்கையைஅழிக்கும், கசப்பான சொல் வெறுப்பைச் சம்பாதித்துக் கொடுக்கும். நளினமான சொல் வாழ்க்கையை மேன்மையாக்கும், தக்க சமயத்தில் சொன்னசொல் கவலை போக்கும்.

—விஸ்டம்

## சென்னை சிறையில்

# புலிகள் மீதான தாக்குதலுக்கு விசாரணை நடாத்த உத்தரவு

(சென்னை)

சென்னை மத்திய சிறையில் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படும் ஒன்பதுபேர் தப்பியோடியதையொட்டி சென்னை சிறைச்சாலையில் ஏனைய சில கைதிகள் சிறைக் காவலர்களால் தாக்கப்பட்டனர் என்றுதெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உண்மையில் தாக்கப்பட்டார்களா என்று நேரில் சென்று விசாரிக்கும்படி தடாவழக்குகளை விசாரிக்கும் இரண்டாவது நீதிமன்ற நீதிபதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: சிவில்உரிமை குழு ஒன்றினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரித்த நீதிபதி சிவராஜ் பாட்டேல். தடா வழககுகளை விசாரிக்கும் ரி. ராதா கிருஷ்ணனை மத்திய சிறைச்சாலைக்கு நேரில் சென்று அங்கு காயமடைந்த கைதிகளின் பட்டியலையும். காயத்தின் தன்மைகளையும் அறிந்து எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் அறிக்கையொன்றை உயர்நீதிமன்றத்தில் சமர்பிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

அவருடைய அறிக்கைக்கு காத்திராமல் உடனடியாக காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை பெற ஏற்பாடு செய்யும்படி உயர்நீதி மன்றம் அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை மத்திய சிறையில் தடா கைதிகள் தாக்கப்பட்டமையானது மனித உரிமைகளை மீறும் செயல் என்று திராவிடர் கழக பொதுச்செயலர் இ. வீரமணி கண்டனம் தெரிவித்துள்ளார். ம-சி

### யுத்தத்தை தொடரும் நோக்கம் புலிகளுக்கில்லை

(மட்டக்களப்பு)

யுத்தத்தை தொடரவேண்டும் என்ற நோக்கம் விடுதலைப் புலிகளுக்கு கிடையாது என கிழக்கில் விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திலகர் பி. பி. சி நிருபருக்கு வழங்கிய செவ்வியில தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழ் மக்களை பொறுத்தவரையில் இனப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்பதே புலிகளின் விருப்பமாகும்.

இவ்விவகாரத்தை முடிவுக்குக் கொணரவிடாமல் இழுத்தடிக்கும் விதமாக இலங்கை இராணுவமே செயற்பட்டு வருகின்றது.

எமது மக்கள் படும் கஷ்டங்கள் எமக்கு நன்கு விளங்கும். மக்களின் கஷ்டங்களை உணராது இராணுவம் தன்னிச்சையாக செயற்பட்டு வருவதையும் நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது என்றார். (க-இ)

## நமது நோக்கு

### சிம்மாசன மகிமையா?

போஜராசன் வேட்டைக்குப் போனான்—பரிவாரங்களோடு, வேட்டையாடிய களைப்பில் ஓர் மர நிழலில் இருந்தபோது—

அந்த மரத்தில் கட்டப்பட்ட பரணில் இருந்த குடியானவன், ''அரசே! நன்றாகக் களைத்துப் போனீர்கள். எனது தோட்டத்துக் கனி வர்க்கங்களை உண்டு மகிழ்ந்து ஓய்வெடுங்கள்'' என்றான்,

ஆவலோடு தோட்டத்திற் புகுந்து கனிகளைப் பறிக்கும்போது—

''பாடுபட்டு அமைத்த எனது பழத்தோட்டத்தைப் பாழ்படுத்துபவர் யார்?'' எனத் தடியோடு வந்த குடியானவன் கண்டபடி ஏசிக் கலைத்தானாம்!

அரசனும் பரிவாரமும் மீண்டும் மரநிழலில் சோர்வோடு இருந்தபோது, ''கனிகளைப் பறித்து உண்ணாத காரணமென்ன? ஏன் சோர்வோடு இருக்கிறீர்கள்?'' எனக் கேட்டானாம் மீண்டும் பரணில் ஏறிய குடியானவன்!

இவன் செயலை ஆராய்ந்த அமைச்சன் பரணின் கீழுள்ள மண்ணில் ஏதோ மகிமை இருக்கிறது எனச் சந்தேகித்துத் தோண்டிப் பார்த்தபோது, அற்புதமான சிம்மாசனமொன்று அங்கிருந்ததாம்!

இன்று—இந்த அரசாங்கம் வெளியிடும் அறிவிப்புகள், அறிக்கைகள் எல்லாம் காருண்யம் மிக்கவைகளாக உள்ளன. மக்களுக்கு மகிழ்ச்சி தருபவையாக இருக்கின்றன; சொர்க்க வாசலுக்கே அழைத்துச் செல்பவையாக அமைகின்றன!

ஆனால்—அவை அமுல் நடத்தும்போது நாம் காண்பதென்ன?

பொருளாதாரத் தடைகள் பல நீக்கப்பட்டன எனத்தான் சிம்மாசனத்திலிருந்து அறிவிப்புகள் வந்தன.

ஆனால்— 'பற்றறிகள்' போன்ற தடை நீக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்தபோது ''யாரின் அனுமதியோடு கொண்டு போகிறீர்கள்?'' எனக் கேட்டுத் தடைகள், தாமதங்கள் தொடரும்போது, தடியோடு நின்ற குடியானவன் காட்சிதான் நினைவுக்கு வருமல்லவா?

ஜனாதிபதி மாளிகையிலிருந்துவரும் அறிவிப்புகளுக்கும், நடைமுறையில் நாம் காணும் நடவடிக்கைகளுக்கும் பல இடைவெளிகள் இருப்பதேன்?

சிம்மாசனத்தின் கீழ் ஏதாவது மகிமையான பொருள் இருக்கிறதா?

வட— கிழக்கு புனரமைப்கெனக் கூறி

# வெளிநாட்டு நிதி உதவியை வேறு வேலைகளுக்கு திருப்ப முயற்சி

(மணிலா)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின்புனரமைப்பை மேற்கொள்ளப்போவதாக கூறி அரசாங்கம் வெளிநாடுகளில் நிதி உதவி பெற்று அந்நிதியை வேறு அம்சங்களுக்கு செலவிடதிட்டமிட்டதாக விடுதலைப்புலிகள் பகிரங்கமாக அரசாங்கத்தை குற்றம்சாட்டியுள்ளனர். என்று 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

'வெரித்தாஸ்' இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது; இலங்கைக்கு நிதி உதவி செய்யும், நாடுகளின் கூட்டம், இந்த ஆண்டுபாரிஸ் நடைபெறப் போவதால், அதற்கு முன்பாக வடகிழக்கு மாகாண அபிவிருத்திகளுக்கென அரசு வெளிநாடுகளில் பிரசாரத்தில் ஈடுபட்டு, அந்த நாடுகளின் நிதி உதவி பெற்று தனது பிற தேவைக்கு பயன்படுத்ததிட்டமிட்டுள்ளது என்று புலிகள் லண்டனில் இருந்து வெளியிட்டுள்ள அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர் எனவும் வெரித்தாஸ் மேலும் கூறியது. ம-சி

# விடுதலைப்புலிகள் தேசிய அரசு ஒன்றை அமைத்துள்ளார்கள்

## — வாசுதேவா பேட்டி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமக்கென்று ஒரு இராணுவத்தையும், தேசிய அரசையும் வைத்திருக்கிறார்களென நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அரசியல் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய பேட்டியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: சட்ட, நிர்வாக, நீதி அமைப்புகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் நன்கு இயங்குகின்றன.

பயங்கரவாதம் தொடர்பாக யாரும் பேசமுற்பட்டால், அரச பயங்கரவாதம் படைகள் மூலமாக செய்தவை சிறிய அளவானவையல்ல. யாழ்ப்பாணத்தின் மீது எறிகணைகளையும், குண்டுகளையும் வீசி அழித்தார்கள். அப்பாவித் தமிழ்மக்களின் வாழ்க்கையையும் அழித்தார்கள்.

விடுதலைப் புலிகள் மக்களின் சகஜ வாழ்க்கையை உருவாக்கப் பெரும் ஆர்வமாக உள்ளார்கள். தங்கள் பிரதேசங்களுக்குரிய நிர்வாக கட்டுமானங்களை உருவாக்குகின்ற வேலைகளை அவர்கள் தொடங்குவதற்கு விரும்புகின்றார்கள்,

அரசாங்கம் எரிபொருள் தடை, மீன்பிடித் தடை என்பவற்றை நீக்கவேண்டும். இலகுவான போக்குவரத்துப் பாதையொன்றை திறந்துவிடவேண்டும். அரசாங்கம் சரியாக தொழிற்படவேண்டியது அவசியம் எனவும் அவரது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (கே-ரி)

## இராசி பலன்

04-03-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு மாசி –20)

திருதியை மு. இ. 7-09 வரை, ரேவதி பி. இ. 3-17 வரை, மரணயோகம், இராகு காலம் காலை 9-27 முதல் 10-57 வரை, சுபவேளை மாலை 3-27 முதல் 4-57 வரை.

மேஷம்: முடிவில்லா பிரச்னை, அமைதியின்மை, பணக் கஷ்டம்.

இடபம்: உறவினர் ஆதரவு, தெய்வசிந்தனை, பாராட்டு.

மிதுனம்: கடின சிந்தை, வெளியார் நட்பு, தொழில் சிறப்பு.

கடகம்: வீண் பகை, தவறான செயல், கடன்படல்.

சிங்கம்: அதிகாரிகள் பயம், காரியதடை, குழப்பம்.

கன்னி: முதியவர் அன்பு, சுபகாரியம், சம்பாஷணை.

துலாம்: துணிச்சலான காரியம், வசதி மேன்மை, தியானம்.

விருச்சிகம்: வேலைக்கஷ்டம், அமைதிக்குறைவு, அலைச்சல்.

தனுசு: வேதனைப்படல், உறவில் விரிசல், காரியதடை.

மகரம்: தொழில் சிறப்பு பணிவிடை, தானதர்மம்.

கும்பம்: மனப் போராட்டம், எதிரிகள் பயம், வீண் விரயம்.

மீனம்: ஏமாற்றம், பிறர் கண்டனம், கடும் முயற்சி.

— ஜோஸ்யர்

## புலதும் பத்தும்

### முப்பால்

உளவளர்ச்சிக்குத்திருக்குறளின்முப்பால், உடல் வளர்ச்சிக்கு...? மனிதப் பால், விலங்குப் பால், தாவரப் பால் என முப்பால் உண்டு. தாய்ப்பால் தான் மனிதப் பால்.

பசுப்பால். காராம்பசுப் பால், செந்நிறப் பசும்பால், வெள்ளைநிறப் பசும்பால், எருமைப் பால், வெள்ளாட்டுப்பால், செம்மறியாட்டுப் பால், கழுதைப்பால், குதிரைப்பால், ஒட்டகப்பால், யானைப்பால் ஆகிய பதினென்றும் விலங்குப்பால். மருத்துவத் தேவைக்கு இவை பயன்படுமாம்.

தேங்காய், ஆல், அத்தி, பேயத்தி, பிராயன், புங்கம், கள்ளி, சதுரக்கள்ளி, இலைக்கள்ளி, இறப்பர் ஆகிய பத்து வகை மரப்பாலும், சங்கம், எருக்கு, வெள்ளெருக்கு, காட்டாமணக்கு, சிற்றாமணக்கு, பிரமதண்டி ஆகிய ஆறுவகைச் செடிப் பாலும், கொடிக்கள்ளிப் பால் என்ற கொடிப்பாலும் மனித உடலுக்கு உதவும்.

— மயூரன்

பரம்பரை தந்த பயன்தரு மரங்கள்
மாண்புடன் வாழ்த்தி வளர்த்திடுவோம்

### சத்துணவு விநியோகம்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் உதவிகளற்ற நிலையில் இயங்கி வரும் பல பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கடந்த மாதம் முதல் புலோலி பிரதேச சபையினரால் சத்துணவும், இலைக்கஞ்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

கெருடாவில், அல்வாய் வடக்கு, புலோலி மத்தி, புலோலி தெற்கு, புற்றளை, தும்பளை, வராத்துப்பளை போன்ற பகுதிகளிலுள்ள பாலர் பாடசாலைகளுக்கே இச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றன. -160

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-03-04

சனி இரவு

08-01 புரட்சிக் குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம்- பெண்களின் பிரச்னைகள் என்றால் என்ன?

1995-03-05

ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-03-04

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதுயவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினாடி வினா
06-00 சிந்தனைக்கு சில வினாடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தவக்கால நற்சிந்தனை

''பசித்திருப்பவனுக்கு உன் உணவைப் பகிர்ந்தளித்தால் உன் வெளிச்சம் இருள் நடுவில் உதயமாகும்''

(இசை 58:10)

அயலான் பசியால், தாகத்தால் நோயால் துடிக்கும் போது நாம் அவனைப் பார்த்துக்கொண்டும், அவன் துன்பத்தில் பங்காளிகளாகாது பார்வையாளர்களாக இருந்து கொண்டு நோன்பு அனுசரிப்பதால் எதுவித பலனும் நன்மையும் ஏற்படப்போவதில்லை. அவனது பசியைப் போக்கி, பகிர்ந்து வாழ்தலிலே தான் உண்மையான நோன்பு தங்கியிருக்கின்றது.

தா. மைதிலி

# ★ இருபது வருடகாலத்தில் இலங்கையில் 1லட்சத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் கடந்த இருபது வருட காலப் பகுதியில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1971 ம் ஆண்டில் 20,000 பேரும், 1987—1990 காலப் பகுதியில் 60,000 பேரும், வடபகுதி யுத்தத்தில் 30,000 பொதுமக்களும், 1977ற்கும் 1992ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளதாக இப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது

இதேவேளை இலங்கையில் (வடபகுதிதவிர) நாளொன்றுக்கு 20 பேர் வீதம் தற்கொலை செய்துவருகிறார்கள் என்றும் 1983ல் 6,270 பேரும், 1998ல் 7500 பேரும் தற்கொலை செய்துள்ளனர்

1982ல் காதலினால் 1253 பேரும், வறுமையினால் 743 பேரும், திருமணப் பிரச்னைகளால் 101 பேரும், தொழிலின்மையால் 271 பேரும், மனநோய் காரணிகளால் 575 பேரும் தற்கொலை செய்துள்ளனர். -ரி

# கலை இலக்கிய கருத்தரங்கு இன்றைய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)
விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும் வெளிச்சமும் இணைந்து நடாத்தும் கலை, இலக்கியக் கருத்தரங்கின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 9-00 மணி முதல் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறுகின்றன.

வணபிதா, பிரான்சிஸ் யோசவ் அடிகளாரின் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிகளில், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. வே. பாலகுமாரன் தொடக்கவுரையையும், பேராசிரியர் அ. சண்முகதாஸ் முதலுரையினையும் நிகழ்த்துவர்.

இக்கருத்தரங்கிலே வாழ்வியலுடன் இணைந்த பாரம்பரிய கலை வடிவங்கள் என்ற பொருளில் முல்லைமணி வே, சுப்பிரமணியமும். கலைப்பேரரசு ஏ. ரி பொன்னுத்துரையும், உலக விடுதலைப்போராட்ட இலக்கியங்கள் என்ற பொருளில் திரு. ஐ. சாந்தனும், வாழ்வியலுடன் இணைந்த சிறுகதைகள் என்ற பொருளில் திரு. க. பாலநடராஜனும், திரு. க. சட்டநாதனும். போராட்ட கால வாழ்வைப் பிரதிபலிக்கும் கலை இலக்கியங்கள் என்ற பொருளில் கவிஞர் இ. முருகையனும் உரையாற்றுவர். [ரி[

# வெளிநாட்டு தூதுவர்கள் புலிகளைச்சந்திப்பர்

[யாழ்ப்பாணம்[
எதிர்வரும் 7ம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரும் மேற்குநாட்டுத் தூதுவர்கள் அன்றைய தினமே விடுதலைப் புலிகளைச் சந்திக்கவுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடனான சந்திப்பையடுத்து சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகள், யாழ் அரச அதிபர், மற்றும் பிரான்ஸ் மருத்துவக்குழுவினரையும் மேற்படி தூதுவர்கள் சந்திப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து 6ம் திகதி புறப்படும் மேற்குநாட்டு தூதுவர்கள் திருமலையிலிருந்து கப்பலில் புறப்பட்டு பருத்தித்துறைக்கு வருவார்கள். இவர்கள் 8ம் திகதி கொழும்பு திரும்பிச் செல்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [ரி

## காணமல்

1-ம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது மாவட்ட பதிவாளர்களாக பணியாற்றும் பிரதேச செயலாளர்களும் இதனை தீர்மானிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் இறப்புக்களை பதிவுசெய்யும் முகமாக கிடைக்கும் விண்ணப்பங்களை பொறுப்பேற்றல் விசாரணைகளை நடத்துதல் அத்துடன் இறப்புப் பதிவை அங்கீகரிக்கும் பணிகள் பிரதேச செயலகங்கள் மேற்கொள்ளும்.

பதிவுக்கான விண்ணப்பங்கள் இறந்த நபர் இறுதியாக குடியிருந்த மாவட்டத்தின் மாவட்ட பதிவாளரிடமிருந்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் எஸ். முத்துக்குமாரன் தற்காலிக ஏற்பாடுகள் சட்டம் இரண்டு வருட காலத்திற்கே வலுவில் இருக்கும். எனவே காணமல் போயுள்ளவர்களின் குடும்பத்தினர் இதன்பிரகாரம் மரண அத்தாட்சி பத்திரத்தைப் பெற உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறார். -ரி

## 5 வருடகால பல்கலைக்கழக அனுமதி பற்றி ஆராய வேண்டும்

(கொழும்பு)
கடந்த ஐந்து வருடகால பல்கலைக்கழக அனுமதிகள் பற்றி ஆராய வேண்டுமென்று யாழ், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று நாடாளுமன்றில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒட்டு மொத்தமான பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக கடந்த காலங்களில் முறைகேடான நடைமுறைர்ள் பின்பற்றப்பட்டதாக அறிய முடிகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் அவர் கூறியதாவது; குறைந்த பட்சம் கடந்த ஐந்துவருடகாலத்துக்கான பல்கலைக்கழக அனுமதியாவது மீள ஆராய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இரண்டு தசாப்தங்களாக இந்த நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக இந்த நாடு அனைத்து துறைகளிலும் பாரிய பின்னடவை சந்தித்து வந்துள்ளது. பொருளாதாரம், சுகாதாரம், மனிதவிழுமியங்கள், ஆக்க முயற்சிகள், கலாச்சார சீரழிவு என்பவற்றில் அதிக இழப்புக்களை இந்த நாடு சந்தித்துள்ளது. ம-ரி

## கிளாலி—பூநகரி

[1ம் பக்கத் தொடர்ச்சி!
ருந்து இம்மாற்றம் நடைமுறைக்கு வரும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியற்துறை அறிவித்துள்ளது. -ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

## ''யுத்தத்திற்கான முடிவு''

(கொழும்பு)
''யுத்தத்துக்கான முடிவு' என்ற தலைப்பில் கொழும்பில் சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட நூலின் விற்பனையின் மூலம்கிடைக்கும் பணம் யாழ். பொதுசன நூலகத்தை புனரமைப்பதில் செலவிடப்படும் என்று நூலாசிரியர் தெரிவித்துள்ளார்.

வடக்கு—கிழக்கு யுத்தம் காரணமாக உயிரையும் உறுப்புக்களையும் இழந்த மக்களுக்கு இந்த நூல் அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. -ரி

## முடிவு

1-ம் பக்கத் தொடர்ச்சி)
என்றும் எமது நியாயமான போராட்டத்திற்கு அரசு பதிலளிக்கத் தவறினால் இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். சிரி

## ஐ. தே. க. ஆட்சிக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதத்தன்மையற்ற சித்திரவதைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பொலிஸார் இப்போது மிகப்பிரபலமானஅரசியல் வாதிகளை விசாரித்து வருகின்றனர்.

இந்த சித்திரவதைக்கூடம் மிகப்பிரபலமான ஒரு சித்திரவதைக்கூடமாக இயங்கி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சித்திரவதைக்கூடத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் கொலைகள் பற்றியும் பொலிஸார் விசாரணைகளை இப்போது ஆரம்பித்துள்ளனர். ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிடமும் இந்த சித்திரவதை கூடம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். இ-ரி

# தபால் சேவையை சீராக்க நடவடிக்கை

(கொழும்பு)
வடக்கு—கிழக்கு பகுதிகளில் தபால் மற்றும் தந்தி சேவைகளை துரிதமாக நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கென செலவிடுவதற்கு பெருமளவு பணம் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சேவைகள் வடக்கு-கிழக்கு பகுதியில் சோர்வடைந்து வருவதால் இப் பகுதியிலுள்ள பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். க-ரி

## இலக்கிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வும் பிரதிபலித்தன,

நேற்றைய கருத்தரங்கில் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருந்து வந்த படைப்பாளிகள், கலைஞர்கள், சுவைஞர்கள் என்று ஏராளம் பேர் சமூகமளித்திருந்தனர்.

கருத்தரங்குக்கு எழுத்தாளர் சொக்கன் தலைமை வகித்தார், அவர் தமது தலைமையுரையில், ஒரு உயர்ந்த சமுதாயத்தை படைக்க வேண்டுமென்ற நிலையை, கலை பண்பாட்டுக் கழகமும் வெளிச்சம் சஞ்சிகையும் ஏற்படுத்தி வருகின்றன. இன்றைய கருத்தரங்கும், எண்ணுகின்ற எண்ணத்துக்கொண்டனர்.

கும் சுமைக்கும் ஏற்ப மிகப் பெரியதொரு கருத்தரங்காக அமைந்து இருக்கின்றது'' என்றார்.

கருத்தரங்கில் குழந்தை சண்முகலிங்கம், செம்பியற் செல்வன் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதர், கலாமணி, கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோரும் உரையாற்றினார்கள். இலக்கிய ஆர்வலர்கள் பலரும் இக் கருத்தரங்கில் கலந்து ம-ரி

# அரசு புலிகள் சமாதானபேச்சு எமக்குநம்பிக்கை அளிக்கிறது

## மட்டு. ஆயர் கருத்து

(லண்டன்)
சமாதானத்தை எட்டுவதற்கு இப்போது நடக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் எங்களுககு ஒரு நம்பிக்கை இருக்கின்றது என்று திருமலை மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பி. பி. ஸிக்கு வழங்கியபேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: முன்னர் இருந்த நம்பிக்கையிலும் பார்க்க தற்போதுள்ள நம்பிக்கையை எச்சரிக்கையாகவே அணுகுகின்றோம்.

கடந்த காலங்களில் நடந்த பேச்சுவார்த்தைகளில் எல்லாம் சில சில முட்டுக்கட்டைகள் தடைசெய்து கொண்டிருந்தன. ஆனால் இம்முறை அரசாங்கம் முழுமூச்சாக இருக்கின்றது. மக்களுடைய நம்பிக்கையும், ஆணையையும் பெற்றிருக்கிறது அரசாங்கம். ஆனபடியால் எதுவிதத்திலும் தம்முடைய ஆட்சியின் திறமையைக் காட்டுவதற்கும் தங்களுடைய பொறுப்புணர்வைக் காட்டுவதற்கும் இது நல்ல அரிய வாய்ப்பாக இருக்கின்றது. நாம் எச்சரிக்கையோடு இருந்தாலும் நல்ல நம்பிக்கையோடு இருக்கிறோம் என்றார். ம-ரி

## நரோமா கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் 5 ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து புறப்படவிருந்த நரோமா கப்பல் மார்ச் 6ம் திகதி திருகோணமலையிலிருந்து புறப்பட்டு 7ம் திகதி காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்து அன்றைய தினமே திருகோணமலைக்கு புறப்படுகின்றது.

எனவே பங்குனி மாத முதல் கப்பல் சேவைக்குபதியப்பட்ட பயணிகள் யாவரும் 7-3-1995 ஆம் திகதி காலை 7 மணிக்கு முன்பதாக பருத்தித்துறை துறைமுகத்துக்கு செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். ரி

## அரசின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
1988க்கு பின்னர் காணாமல் போனோர், கொலையுண்டோர் பிரச்னைகளை விசாரிக்கப்படவேண்டுமென விசாரணைக் குழுக்களுக்கு பணிப்புரையை அரசு விடுத்தது.

1988க்கு முன்னர் தமிழ்ப் பகுதிகளில் நடந்த பல அராஜக சம்பவங்கள் இதன் மூலம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன.

1978ன் பின்னர் ஐ. தே. கவின் ஜே. வி. பி. ஒழிப்பு நடவடிக்கையின்போது பெருமளவு சிங்களவர்கள் கொல்லப்பட்டனர். இதன் அடிப்படையாகக்கொண்டு சிங்கள மக்களின்ஆதரவைத் தேடவே 1988ம் ஆண்டின் புகார்களை விசாரிக்க அரசு தீர்மானித்ததாக தெரிவிக்கப்படுகிறது. -ரி

## சமாதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கரமாக அமுல் செய்யப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தின் சமதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் ஆக்கபூர்வமான விதத்தில் பதிலளித்துள்ளார்.

வடபகுதி மக்கள் அரசாங்கத்தின்மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம்மீறக்கூடாது. அவர்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதுஅரசாங்கத்தின் கடமையாகும்.

கடந்த 17 வருடங்களாக ஊழல் மலிந்திருந்த நிர்வாகத்தை மூன்று அல்லதுநான்கு மாதங்களுக்குள் அரசாங்கம் சீரமைத்துள்ளது என்றும் அவ கூறினார்

அரசின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி விளக்கி கூறுவதற்கென ஒழுங்குசெய்யபபட்ட இக்கூட்டத்தில் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அங்கத்தவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். ரி

## சாகும் வரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வித்தனர். உடல் களைத்து, தஞ்சக்கேடான நிலையில் காணப்படும் இவர்கள் படுத்த நிலையிலே தமது உண்ணாவிரதத்தை தொடர்கின்றனர்.

தமது உண்ணாவிரதப் போராட்டம் குறித்து அரசு தரப்பிலிருந்து எவ்வித பதிலும் இதுவரை கிடைக்காதது குறித்து போர்க்கைதிகள் பெரும் கவலைகொண்டுள்ளனர்

இன்று நான்காவது நாளாகவும் இவர்களின் உண்ணாவிரதம் தொடரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்பொழுது தண்ணீர் அருந்தி உண்ணாவிரதம் இருந்து வரும் இவர்கள் இன்னும் மூன்று நாட்களின் பின்னர் தண்ணீர அருந்தாமல் சாகும்வரை உண்ணாவிரதத்தை தொடர்வர். எனவும் தெரிவிக்கப்பட்டது. —சி-ரி